


**முள்ளிவாய்க்காலில் இறுதி வரை நின்று போராடிய போராளியின் அனுபவப் பதிவு இது. பாதுகாப்பான தளம் ஒன்றை இவர் சென்றடையும் வரை இவரது விபரங்களை தவிர்த்துக்கொள்கின்றோம்.**

# விடுதலைப் புலிகளின் அடுத்தகட்ட நகர்வுகளுக்கு நெருக்கடி ஏற்படுத்திய ஆள ஊடுருவும் படையணி

யாழ்ப்பாணத்தின் நிலைமை இவ்வாறிருக்க, கிழக்கிலும் இவ்வாறான நிலைமையே ஏற்பட்டிருந்தது. அங்கும் போராளிகள் இராணுவத்தினரிடம் பிடிபடும்போது அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தி உயிரை அர்ப்பணிக்கும் வகையில் குண்டுபொருத்திய ஜக்கற்றுடன் செயற்படத் தொடங்கியிருந்தார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிலைமை இவ்வாறிருக்க, வன்னியில் புதிய போராளிகளின் அணிகள் பெருகிக்கொண்டிருந்தன. போராளிகளாக பலர் தாமாகவும், பெற்றோர்களாலும் ஒப்படைக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அதிகமானவர்கள் வந்து இணைந்ததால் ஒருகட்டத்தில் அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு போதியளவு பயிற்சி ஆசிரியர்களின் இல்லாமை ஒரு பெரும் பிரச்சினையாக மாறியிருந்தது.

அன்றைய பயிற்சி முகாம்களை எடுத்து கொண்டால் 200 பேர் பயிற்சி பெறுவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டிருந்தன. காட்டுக்குள் அமைக்கப்பட்ட முகாமிற்கு கிணறு வசதி, கழிப்பிடவசதி, பயிற்சி இடைவேளையிலான பொழுதுபோக்குவசதி என அனைத்தும் நிறைந்து காணப்படுகிறது. அத்துடன், அவர்களுக்கு பயிற்சிக்குத் தேவையான சத்தான உணவுகளும் வழங்கப்பட்டன. அதனைவிட கல்வி அறிவு, பொது அறிவு வகுப்புகள் எல்லாம் இந்த முகாம்களில் அடிக்கடி நடைபெறும். ஒவ்வொரு போராளிக்கும் சூட்டுபயிற்சிக்காக சுமார் 30 ரவைகள் வழங்கப்பட்டன. ஆண், பெண் இருபாலருக்கு ஏற்றவகையில் இது நடைமுறைபடுத்தபட்டது. இந்த அடிப்படைப் பயிற்சித் தளங்கள் தளபதி கேணல் கடாபி அவர்கள் பொறுப்பில் நேரடியாக நடைபெற்றன.

இவ்வாறான பயிற்சித் தளங்களை சிறீலங்கா படையின் உளவு விமானங்கள் கண்டறிந்து தகவல்களைக் கொடுத்தும் இருந்தன. இந்தப் படங்களைக் கொண்டு விடுதலைப் புலிகள் சிறுவர்களுக்கு பயிற்சி கொடுக்கின்றார்கள் என சிறீலங்கா பிரச்சாரங்களை மேற்கொண்டதுடன், அவற்றின் மீது சிறீலங்கா வான் படையினர் வான் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதல்களினால் அச்சமடைந்த இளைஞர், யுவதிகள் சிலர் பயிற்சியில் இருந்து விலகிச்சென்ற நிகழ்வுகளும் நடந்தன.

பயிற்சித் தளங்கள் மீது தாக்குதல் நடத்திய அதேவேளை, விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளைக் கொல்வதற்காக ஆள ஊடுருவும் படையணியையும் களத்தில் இறக்கியது சிறீலங்கா. நீண்டதூரம் ஊடுருவி காத்திருந்து விடுதலைப் புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்களை இலக்குவைத்து தாக்கும் நடவடிக்கைக்காக பெருமளவான ஆள ஊடுருவும் படையினர் இறக்கப்பட்டிருந்தனர். சிறீலங்காவின் இந்த நடவடிக்கையானது, அடுத்த கட்டத் தாக்குதல்களை முன்னெடுப்பதற்கு ஒரு தடைக்கல்லாகியது. தாக்குதல்களை முன்னெடுப்பதற்கு முன்பாக, விடுதலைப் புலிகள் தமது படையணியை இன்னொரு பக்கத்திற்கு திசை திருப்பவேண்டிய நிலையை இது ஏற்படுத்தியது. தளபதிகளின் பாதுகாப்பிற்காக பெருமளவு போராளிகளை ஒதுக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளின் பின் தளங்களுக்குள் இந்த ஆள ஊடுருவும் படையணி ஊடுருவிவிடாமல் தடுப்பதற்கு பெருமளவான போராளிகளை நிறுத்தவேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது. போராளிகள் நிறுத்தப்பட்டு பின்தளங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

அதேவேளை, முதன்மை வீதிகளில் 100 மீற்றருக்கு ஒரு காவலரண் அமைக்கப்பட்டு, பொதுமக்களை கொண்ட உள்ளக பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்மூலம் வீதிப் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதாவது வன்னியில் உள்ள திருமணம் செய்தவர்கள், தொழில்புரிபவர்கள் மக்கள் படைகட்டுமானம் மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஏழு நாட்கள் என்ற முறையில் கட்டாய பாதுகாப்பு பணியில் ஈடுபடுமாறு பணிக்கப்படுகின்றார்கள். இந்தக் கடமையில் ஈடுபட மறுப்பவர்களுக்கு தண்டப்பணம் அறிவிடப்பட்டது.

வன்னியை பொறுத்தமட்டில், பெரும்பாலான இடங்கள் பெரும் காடுகளால் நிறைந்துள்ளது. காடுகளுக்கு ஊடாகத்தான் பல வீதிகள் செல்கின்றன. இவ்வாறு இந்த வீதியினை பாதுகாக்கவே இவர்கள் கட்டாயத்தின் பெயரில் அழைக்கப்படுகின்றார்கள். ஆனால் நகர்புற வீதிகள் காவல்துறை உறுப்பினர்களை கொண்டு பாதுக–ாக்கபடுகின்றது. ஒரு கிலோ மீற்றருக்கு ஒரு காவலரண் அமைக்கப்பட்டு காலை, மாலை சுற்று ரோந்து செய்யப்பட்டு நகர்புற வீதிகள் பாதுகாக்கப்படுகின்றன.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் உள்ளக பாதுகாப்பிற்கென ஏராளமான ஆயுதங்கள், அணிகள் ஒதுக்கப்படுகிறன. இதனால் நிர்வாக தேவை அதிகரிக்கின்றது. ஆயுதப் பற்றாக்குறை நிலவுகிறது. பழுதடைந்த ஆயுதங்கள் திருத்தி பாவிக்கும் அளவிற்கு நிலைமை தள்ளப்படுகிறது. உதாரணமாக கூறுவதானால் வீதிப் பாதுகாப்பில் உள்ள உள்ளக பாதுகாப்பு படையினருக்கு ஆயுதம் போதாத நிலை காணப்படுகிறது. 500 மீற்றர் தூரத்திற்கு ஒரு காவலரண் அமைக்கப்படுகிறது. அதில் மூன்று நாலு பேர் காவலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்களில் இருவருக்குத்தான் ஆயுதம் வழங்கபட்டிருக்கும். வன்னியில் உள்ள வீதிகளின் நீளத்தைக் கணக்கெடுத்து பார்த்தால் தெரியும் எத்தனை காவாலரண்கள் அமைக்கப்பட்டிருக்கும், எத்தனை பேர் அதற்குத் தேவைப்பட்டிருப்பார்கள் என்பது. விடுதலைப் புலிகளின் தளபதிகள் நடமாடும் அனைத்து வீதிகளும் இவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன.

இதேவேளை, பாதுகாப்புக் கடமைக்கு ஆட்கள் போதாமல் இருக்கையில், பண வசதி படைத்தவர்கள் காவல் கடமைக்குச் செல்லாமல் தண்டப் பணத்தினை கட்டினார்கள். இதனால், உள்ளக பாதுகாப்பிற்கான ஆளணி பற்றாக்குறை மேலும் அதிகரித்தது. இதனால், சில வீதிகள் பாதுகாப்பில் இருந்து நீக்கப்படுகிறது. அத்துடன், ஒரு கட்டத்தில் சுற்றிச்சுற்றி உள்ள பாதுகாப்பு பணிக்காக ஒரு சில பொது மக்களே போகவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இதனால், அவர்களிடையே ஒரு கசப்புணர்வு தோன்றியது. இது பாதுகாப்பில் பலவீனத்தை ஏற்படுத்தியது. இவை அன்று நடந்த உண்மைகள். மக்களின் இவ்வாறான செயற்பாட்டிற்கு அன்று சில பொறுப்புகளில் இருந்த பொறுப்பாளர்களும் காரணம் என்பதும் மறுப்பதற்கில்லை.


காலித்துறைமுகம் மீதான தாக்குதல்

வன்னியின் நிலைமை இவ்வாறிருக்க, விடுதலை புலிகள் தென்னிலங்கை மீது தமது தாக்குதல்களைத் தொடருகின்றார்கள். காலித்துறைமுக முகாம் மீதான தாக்குதல் இதில் முக்கியமானது. 2006 ஒக்டோபர் 18ம் திகதி அதிகாலை நடந்த இந்தத் தாக்குதலில் ஐந்து படகுகளில் வந்த 15 வரையான கடற்புலிகள் தாக்குதலில் ஈடுபட்டதாக சிறீலங்கா படை தரப்பு தெரிவித்திருந்த போதிலும், அவர்கள் தாக்குதலை நடத்திவிட்டு எவ்வாறு தப்பிச்சென்றார்கள் என்பது குறித்து தெரிவிக்கவில்லை. இதில் சிறீலங்கா கடற்படையினருக்கு பெரும் இழப்புகளும் ஏற்பட்டன. பலம் பொருந்தியதாகக் கருதப்பட்ட காலித் துறைமுகத்தில் நுழைந்து தாக்கிவிட்டு தப்பியும் சென்றது சிறீலங்காவிற்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தத் தாக்குதலால் அதிர்ச்சியடைந்த சிறீலங்கா, காலியில் உள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்களைத் தாக்கியழித்து தனது ஆத்திரத்தை தீர்த்துக்கொண்டது.

அத்துடன் கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுகட்ட கடற்புலிகள் மீது தாக்குதல் நடத்தவும் சிறீலங்கா திட்டமிட்டது. அப்போது விடுதலைப் புலிகளின் கடற்புலித் தளங்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியிலேயே அதிகளவில் செயற்பட்டுக்கொண்டிருந்தன.

*(தொடரும்...)*

**வன்னியில் உள்ள திருமணம் செய்தவர்கள், தொழில்புரிபவர்கள் மக்கள் படைகட்டுமானம் மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஏழு நாட்கள் என்ற முறையில் கட்டாய பாதுகாப்பு பணியில் ஈடுபடுமாறு பணிக்கப்படுகின்றார்கள். இந்தக் கடமையில் ஈடுபட மறுப்பவர்களுக்கு தண்டப்பணம் அறிவிடப்பட்டது.**